057/DD/19

TC-108

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

# DEPARTMENTAL TEST FOR APPOINTMENT AS ASSISTANT AUDIT OFFICERS IN THE AUDIT WING OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (ADMN.) DEPARTMENT – PART – I(a) HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (A) ACT, 1959 AND THE RULES FRAMED THERE UNDER AND OTHER ACTS (THEORY AND PRACTICAL)

(Without Books)

Maximum Time : 2 hours | Maximum Marks : 80

## *IMPORTANT INSTRUCTIONS*

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

[Turn over

2. Answers all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**
(b) In any case, a candidate shall choose only one response for each question.
(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**
(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)
(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**
(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**
(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Temple means a place of public religious worship and dedicated to or for the benefit of the __________ Community

(A) All religious (B) Siva

(C) Vaishnava (D) Hindu

கோவில் என்பது பொது நிலைச் சமய வழிபாட்டிற்குரிய இடமாக __________ இனத்தினர் நலத்திற்கான இடம்

(A) எல்லா மக்களும் (B) சைவ

(C) வைஷ்ணவ (D) இந்து

2. Advisory committee means the committee contributed by the

(A) Commissioner (B) Government

(C) District Collector (D) Chief secretary

ஆலோசனைக் குழு என்றால் __________ அமைக்கப்பட்ட குழு என்று பொருள்படும்

(A) ஆணையரால் (B) அரசால்

(C) மாவட்ட ஆட்சியரால் (D) தலைமைச் செயலரால்

3. The commissioner may appoint an E.O. for any religious institution as per section __________ of H.R&C.E Act 1959

(A) 54 (B) 45

(C) 44 (D) 53

1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டம் பிரிவு __________ ன் படி ஆணையர் ஒரு சமய நிறுவனத்திற்கு செயல் அலுவலரை நியமனம் செய்கிறார்

(A) 54 (B) 45

(C) 44 (D) 53

4. The lease of immovable property belonging to the religious institution shall be __________, on the non-payment of the lease rent.

(A) Transferred to others (B) Sold

(C) Terminated (D) Sued in the court

ஒரு சமய நிறுவனத்திற்கு சொந்தமான அசையா சொத்தினை குத்தகைக்கு விடப்பட்டு' குத்தகை தொகையை செலுத்தவில்லையெனில் அந்தக் குத்தகையை

(A) வேறொருவருக்கு மாற்றலாம் (B) சொத்தை விற்று விடலாம்

(C) குத்தகையை ரத்து செய்யலாம் (D) நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்

5. The assessable income of a religious institution is not less than two lakh rupees but is less than ten lakh rupees the trust will be appointed by the

(A) Assistant Commissioner (B) Deputy Commissioner

(C) Joint Commissioner (D) Commissioner

ரூ. இரண்டு இலட்சத்திற்கு மேல் ஆனால் ரூ. பத்து இலட்சத்துக்கு குறைவாக நிகர வருவாய் உள்ள கோவில்களுக்கு __________ அறங்காவலர் குழு நியமக்கப்படும்

(A) உதவி ஆணையரால் (B) துணை ஆணையரால்

(C) இணை ஆணையரால் (D) ஆணையரால்

6. As per Sec. 47, if 3 persons are appointed as trustees one person shall be a member of

(A) Most Backward Class (B) A government official

(C) Schedule caste/Tribe (D) Local M.L.A.

பிரிவு 47-ன் கீழ் 3 அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டால் அதில் ஒருவர் __________ ஆக இருக்க வேண்டும்.

(A) மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவராக

(B) அரசு அலுவலராக

(C) பட்டியல் இனம் பழங்குடியினர்

(D) உள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர்

7. As per Sec. __________no suit or appeal pending before a court shall be withdraw or compromised by the trustee without the previous sanction of the commissioner.

(A) 34 (B) 39

(C) 44 (D) 43

சட்டப்பிரிவு__________ ன் படி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கையோ மேல் முறையீட்டையோ ஆணையரின் முன் அனுமதியின்றி திரும்ப பெறவோ சமரசம் செய்யவோ கூடாது.

(A) 34 (B) 39

(C) 44 (D) 43

8. No office holder or servant of a religious institution shall have the right to be in possession of the __________ and __________without the special order of the commissioner

(A) Cash and Cheque
(B) Registers and records
(C) Jewels and Valuable
(D) Sites and buildings

சமய நிறுவனத்தின் அறங்காவலர்கள் அல்லது பணியாளர்கள் ஆணையரின் உத்தரவின்றி சமய நிறுவனத்திற்கு சொந்தமான __________மற்றும்__________ தம் பொறுப்பில் வைத்துக் கொள்ளக் கூடாது

(A) ரொக்கம் மற்றும் காசோலை
(B) பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள்
(C) நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள்
(D) மனைகள் மற்றும் கட்டிடங்கள்

9. As per sec. __________ the register will contain particulars of the idols and other images in or connected with the institution, whether intended for worship or for being carried in processions.

(A) 32
(B) 29
(C) 34
(D) 58

வழிபடுவதற்காக வைக்கப்பட்டுள்ள சிலைகள் மற்றும் ஊர்வலமாக எடுத்துச் செல்வதற்குரிய சிலைகள் பற்றிய விபரம் சட்டப்பிரிவு __________ல் உள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்

(A) 32
(B) 29
(C) 34
(D) 58

10. The officers and servants appointed to the H.R. & C.E. Department should prefer Hindu Religious as per sec.

(A) 9
(B) 10
(C) 11
(D) 12

இந்து சமய அறநிலையத்துறையில் பணியமர்த்தப்படும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சட்டப் பிரிவு __________ன் படி இந்து மதத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவராக இருக்க வேண்டும்.

(A) 9
(B) 10
(C) 11
(D) 12

11. With the previous permission of the __________ surplus fund of the religious institution shall be appropriated for the purpose of poor Hindu marriages.

(A) Government (B) Commissioner

(C) Additional Commissioner (D) Joint Commissioner

ஒரு சமய நிறுவனத்தின் உபரி நிதியினை __________ முன் அனுமதி பெற்று இந்து ஏழைகளின் திருமணத்திற்கு நிதி உதவி செய்திடலாம்.

(A) அரசின் (B) ஆணையரின்

(C) கூடுதல் ஆணையரின் (D) இணை ஆணையரின்

12. A trustee of a non listed institution indulged in breach of trust __________ may remove or dismiss the trustee.

(A) Assistant Commissioner (B) Deputy Commissioner

(C) Joint Commissioner (D) Commissioner

பட்டியலில் சேராத ஒரு சமய நிறுவனத்தின் அறங்காவலர் நம்பிக்கை மோசடியில் ஈடுபடுவாராயின் அவரை __________ அறங்காவலர் பொறுப்பிலிருந்து விலக்கலாம் அல்லது நீக்கலாம்.

(A) உதவி ஆணையர் (B) துணை ஆணையர்

(C) இணை ஆணையர் (D) ஆணையர்

13. All office holder and servants of a religious institution shall be controlled by the __________ and he can fine suspend, remove or dismiss for breach of trust.

(A) Government (B) Commissioner

(C) Executive Officer (D) Trustee

ஒரு சமய நிறுவனத்தில் பணியாற்றும் எந்த ஒரு அலுவலர் / பணியாளரை __________ தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் அவர்கள் நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டால் தண்டம் விதிக்கவும், தற்காலிக பணிநீக்கம், நீக்கம்/ விலக்கம் செய்யவும் உரிமை உண்டு

(A) அரசு (B) ஆணையர்

(C) செயல் அலுவலர் (D) அறங்காவலர்

14. The annual income of the religious institution is less than Rs. __________ is exempted from payment of contribution and audit fees in the effect from 01.07. 1987.

(A) Rs. 1000/-
(B) Rs. 2000/-
(C) Rs. 3000/-
(D) Rs. 5000/-

ஒரு சமய நிறுவனத்தின் ஆண்டு வருவாய் ரூ. __________ க்கும் குறைவாக இருந்தால் அந்த நிறுவனம் 01.7.1987 முதல் சகாயத் தொகை மற்றும் தணிக்கை கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

(A) ரூ. 1000/-
(B) ரூ. 2000/-
(C) ரூ. 3000/-
(D) ரூ. 5000/-

15. The annual income of the religious institution exceeds Rs.2,00,000/-. This institution incurred Rs.6,000/- towards oru kala pooja. The amount mentioned below to be deducted under sec.92 to assess the income of the institution in?

(A) Rs.6000/-
(B) Rs.5000/-
(C) Rs.7500/-
(D) Rs.7000/-

ஒரு சமய நிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூ. 2,00,000/- இந்நிறுவனம் ஆண்டுக்கு ரூ. 6,000/- ஒரு கால பூஜைக்காக செலவிட்டுள்ளது. சட்டம் பிரிவு 92 ன் படி இந்நிறுவனத்தின் ஆண்டு வருவாயைக் கணக்கிட கீழ்க்கண்ட தொகையை ஒரு கால பூஜை செலவிற்காக கழிக்க வேண்டும்.

(A) ரூ. 6000/-
(B) ரூ. 5000/-
(C) ரூ. 7500/-
(D) ரூ. 7000/-

16. In a senior grade temple __________ days can be taken for audit of Annadhana account per financial year.

(A) 4 days
(B) 5 days
(C) 6 days
(D) 7 days

முதுநிலை திருக்கோவிலின் அன்னதான திட்டத்தின் ஒரு நிதியாண்டிற்கான தணிக்கைக்கு __________ நாட்கள் துய்த்துக் கொள்ளலாம்

(A) 4 நாட்கள்
(B) 5 நாட்கள்
(C) 6 நாட்கள்
(D) 7 நாட்கள்

17. __________ or __________ may at any time on his own motion for reasons to be recorded in writing, direct the trustee to alter the dhittam or scale of expenditure.

(A) Deputy Commissioner/ Joint Commissioner

(B) Assistant Commissioner/ Commissioner

(C) Additional Commissioner/ Joint Commissioner

(D) Assistant Commissioner/ Joint Commissioner

__________அல்லது __________ எந்த சமயத்திலும் தானாக முன் வந்து திட்டம் அல்லது செலவு அளவு நிலையை மாற்றுமாறு அறங்காவலரைப் பணிக்கலாம், ஆனால் அதற்கான காரணங்களை அவர் எழுத்துருவில் பதிவு செய்ய வேண்டும்

(A) துணை ஆணையர்/ இணை ஆணையர்

(B) உதவி ஆணையர் / ஆணையர்

(C) கூடுதல் ஆணையர்/இணை ஆணையர்

(D) உதவி ஆணையர்/இணை ஆணையர்

18. As per section __________ the commissioner may determine what the properties of the math or of the specific endowment attached to the math are and append to the scheme a schedule contain a list of such properties.

(A) 65 (B) 30

(C) 29 (D) 64

சட்டப்பிரிவு __________ ன் படி ஆணையர் மடத்தின் அல்லது மடத்துடன் இணைக்கப்பட்ட குறித்த வகை அறக்கட்டளையின் சொத்துக்கள் எவை எனத் தீர்மானித்து அத்தகைய சொத்துக்களின் விபரப்பட்டியலொன்றை கொண்டிருக்கின்ற ஓர் இணைப்பு பட்டியலைச் செயல் திட்டத்தின் இறுதியில் இணைக்கலாம்

(A) 65 (B) 30

(C) 29 (D) 64

19. The trustee shall scrutinize the entries in the property register __________and submit to the commissioner.

(A) Once in 3 years (B) Once in 5 years

(C) Once in 10 year (D) Every year

அறங்காவலர் சொத்துப் பதிவேட்டில் உள்ள பதிவுகளை __________ கூர்ந்தாய்வு செய்து ஆணையரின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்க வேண்டும்

(A) 3 ஆண்டிற்கொருமுறை (B) 5 ஆண்டிற்கொருமுறை

(C) 10 ஆண்டிற்கொருமுறை (D) ஆண்டுதோறும்

20. The assessable income of a religious institution decreases __________ consecutive years the commissioner may alter the classification.

(A) 3 (B) 5 (C) 4 (D) 6

ஒரு சமய நிறுவனத்தின் நிகர வருவாய் தொடர்ந்து__________ஆண்டுகளாக குறைந்து கொண்டே வந்தால் அந்நிறுவனத்தின் வகைப்பாட்டினை ஆணையர் மாற்றியமைக்கலாம்

(A) 3 (B) 5 (C) 4 (D) 6

21. When the permanent vacancy occurs of the office of the hereditary trustee of a religious institution __________ shall be entitled to succeed to the office.

(A) A fit person

(B) The next in the line of succession

(C) An official from Revenue Department

(D) A person appointed by the court

ஒரு சமய நிறுவனத்தின் ஒரு பரம்பரை அறங்காவலரின் பதவியில் நிலையான காலியிடம் ஏற்படும் போது __________ அந்தப் பதவிக்கு வருவதற்கு உரிமை கொண்டவர் ஆவர்.

(A) தக்கார்

(B) வழிமுறை உரிமையுள்ள அடுத்தவர்

(C) வருவாய்த் துறையில் உள்ள அலுவலர் ஒருவர்

(D) நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் நபர்

22. The trustee of a math shall keep regular accounts of "Pathakanika" the head of the math shall be __________ the pathakanika in accordance with the custom and usages.

(A) responsible for the loss if any

(B) entitled to spend

(C) maintained a separate account and produced for audit

(D) kept as personal fund and deposited in bank an investment

ஒரு மடத்தின் அறங்காவலர் பாதகாணிக்கை முறையாக கணக்கு வைத்து வர வேண்டும். மடாதிபதி பாதகாணிக்கைத் தொகையினை பழக்க வழக்கங்களுக்குட்பட்டு__________உரிமை கொண்டவர் ஆவார்

(A) இழப்பு ஏதேனுமிருப்பின் மடாதிபதியே பொறுப்பு

(B) செலவு செய்ய

(C) தனியே கணக்குகள் பேணி தணிக்கைக்குக் காண்பிக்க வேண்டும்

(D) தன்னுடைய சொந்த பணமாகப் பாவித்து வங்கியில் முதலீடு செய்யலாம்

23. The property belonging to the religious institution is under encroachment, by suo moto or in complaint may initiate action to vacate the encroacher.

(A) H.R.&C.E. Inspector (B) Temple land Thasildhar

(C) Assistant Commissioner (D) Trustee

சமய நிறுவனத்திற்கு சொந்தமாக சொத்து ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால்__________ தாமாக முன்வந்தோ அல்லது புகார் மனு பேரிலோ ஆக்கிரமிப்புதாரரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(A) இந்து சமய அறநிலையத் துறை ஆய்வர்

(B) ஆலய நிலங்களின் தனித் தாசில்தார்

(C) உதவி ஆணையர்

(D) அறங்காவலர்

24. The prasada stall lessee died before the expiry of lease period __________ is the competent authority to allow the legal heir of the lessee to conduct the stall to the remaining period.

(A) Executive Officer (B) Fit person

(C) Commissioner (D) The Government

பிரசாத ஸ்டால் ஏலம் எடுத்து குத்தகைதாரர் ஏல காலம் முடியுமுன்னரே இயற்கை எய்தி விடுகிறார்__________ குத்தகைதாரரின் வாரிசுகளை எஞ்சிய காலத்திற்கு குத்தகையை அனுமதித்து உத்தரவு வழங்கிட அதிகாரம் படைத்தவர் ஆவர்.

(A) செயல் அலுவலர் (B) தக்கார்

(C) ஆணையர் (D) அரசு

25. The jewels and valuables obtained through hundial opening may be kept in the custody of __________ for verification.

(A) Trustee

(B) H.R.&C.E Inspector

(C) Jewels verification Officer

(D) Assistant Commissioner

உண்டியல் திறப்பின் மூலம் கிடைக்கப் பெற்ற நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகளை __________ பொறுப்பில் சரிபார்ப்புக்காக வைத்திருக்க வேண்டும்

(A) அறங்காவலர் (B) இந்து சமய அறநிலையத்துறை ஆய்வர்

(C) நகைகள் சரிபார்க்கும் அதிகாரி (D) உதவி ஆணையர்

26. The Tamil Nadu Animals and Birds Sacrifices Prohibition Act, 1950 is repealed in the year

(A) 1984 (B) 1996

(C) 2004 (D) 2006

1950 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகள் உயிர் பலியிடுதல் தடை செய்யும் கூட்டம் __________ ஆண்டு புதுப்பிக்கப்பட்டது

(A) 1984 (B) 1996

(C) 2004 (D) 2006

27. The Commissioner delegates his powers conferred on him in respect of approving the property register with effect from __________ to the Joint Commissioner Head Quarters.

(A) September 2004 (B) February 2003

(C) July 2005 (D) January 2002

சொத்துப் பதிவேட்டினை அங்கீகரிக்கும் தனக்குள்ள அதிகாரத்தினை __________ முதல் தலைமையாக இணை ஆணையருக்கு அளித்துள்ளார்

(A) செப்டம்பர் 2004 (B) பிப்ரவரி 2003

(C) ஜூலை 2005 (D) ஜனவரி 2002

28. __________ shall verify and attest the property registers prepared and received by the Commissioner for approval.

(A) District Revenue Officer

(B) The Special Officer (Temple lands)

(C) District sub registrar

(D) Assistant Commissioner

ஆணையர் அலுவலகத்திற்கு ஒப்புதலுக்காக வரப் பெறும் சொத்துப் பதிவேட்டினை __________ சரிபார்த்து சான்றொப்பம் செய்ய வேண்டும்.

(A) மாவட்ட வருவாய் அலுவலர்

(B) கோவில் நிலங்களுக்கான தனி அலுவலர்

(C) மாவட்ட சார் பதிவாளர்

(D) உதவி ஆணையர்

29. __________ will approve the property register in respect of temples after verification and attested by the competent authority.

(A) Commissioner (B) Government

(C) Joint Commissioner (D) Additional Commissioner

திருக்கோவிலுக்குரிய சொத்துப் பதிவேடு உரிய நபரால் சரிபார்த்து சான்றொப்பம் செய்த பின்னர்__________ ஆல் ஒப்புதல் அளிக்கப்படும்

(A) ஆணையர் (B) அரசு

(C) இணை ஆணையர் (D) கூடுதல் ஆணையர்

30. Power of Commissioner is delegated to the __________ to take action in respect of the defects pointed out in the Audit Reports in respect of non listed institutions.

(A) Assistant Commissioner (B) Deputy Commissioner

(C) Joint Commissioner (D) Regional Audit Officer

பட்டியலில் சேராக சமய நிறுவனங்களின் மீதான தணிக்கைத் தடைகளின் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமையினை ஆணையர் ____________ க்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

(A) உதவி ஆணையர் (B) துணைஆணையர்.

(C) இணை ஆணையர் (D) மண்டல தணிக்கை அலுவலர்

31. Power of Commissioner is delegated to __________ to take action in respect of the defects pointed out in the Audit Reports in respect of listed institutions except senior grade temples.

(A) Additional Commissioner (B) Chief Audit Officer

(C) Zonal Joint Commissioner (D) Deputy Commissioner

முதுநிலை அல்லாத பட்டியலில் சேர்ந்த நிறுவனங்களின் மீதான தணிக்கை அறிக்கைக்கு நடவடிக்கை எடுக்கும் உரிமை ஆணையரால் __________ க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(A) கூடுதல் ஆணையர் (B) தலைமை தணிக்கை அலுவலர்

(C) மண்டல இணை ஆணையர் (D) துணை ஆணையர்

32. Zonal Joint Commissioner and Joint Commissioner/Executive Officer are authorized to make purchases upto Rs.

(A) 5,000 (B) 7,000

(C) 1,00,0000 (D) 15,000

மண்டல இணை ஆணையர் மற்றும் இணை ஆணையர்/செயல் அலுவலர் ரூ.__________மதிப்புடைய பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(A) 5,000 (B) 7,000

(C) 1,00,0000 (D) 15,000

33. The Joint Commissioner Head quarters shall have power to make purchase upto Rs.

(A) 7,000 (B) 3,00,000

(C) 8,000 (D) 10,000

தலைமையிடத்து இணை ஆணையர் ரூ.__________ மதிப்புடைய பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்

(A) 7,000 (B) 3,00,000

(C) 8,000 (D) 10,000

34. The Assistant Commissioner have power to make purchase upto Rs.

(A) 1,000 (B) 2,000

(C) 4,000 (D) 5,000

உதவி ஆணையர் ரூ__________மதிப்புடைய பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்

(A) 1,000 (B) 2,000

(C) 4,000 (D) 5,000

35. The __________ shall have the power to authorize the trustee to incur expenditure for securing health etc. of pilgrims and worshippers and training of Archakas in respect of institutions under sec.46(i).

(A) Assistant Commissioner (B) Deputy Commissioner

(C) Joint Commissioner (D) Additional Commissioner

சட்டப்பிரிவு 46(i). ன் கீழ் வரும் நிறுவனங்களின் அறங்காவலர்கள் சேவார்த்திகளின் உடல் நலன் கருதியும் அர்ச்சகர்களுக்கு பயிற்சி அளிக்கவும் செலவு செய்ய அனுமதி வழங்கலாம்.

(A) உதவி ஆணையர் (B) துணை ஆணையர்

(C) இணை ஆணையர் (D) கூடுதல் ஆணையர்

36. With effect from 01.03.2010 the Trust Board will be in power upto __________ years.

(A) 3 years (B) 2 years

(C) 1 year (D) 5 years

01.03.2010 முதல் அறங்காவலரின் பதவிக்காலம் __________ ஆண்டுகள் ஆகும்.

(A) 3 ஆண்டுகள் (B) 2 ஆண்டுகள்

(C) 1 ஆண்டு (D) 5 ஆண்டுகள்

37. In order to settle the audit objection speedily the government appointed audit committee in __________ stages.

(A) 2 stages (B) 5 stages

(C) 3 stages (D) 4 stages

தணிக்கைத் தடைகளுக்கு விரைந்து தீர்வு காண __________ நிலையில் தணிக்கைக் குழுக்களை அரசு நியமித்தது.

(A) 2 நிலைகள் (B) 5 நிலைகள்

(C) 3 நிலைகள் (D) 4 நிலைகள்

38. City tenants protection Act (2/96) __________ the Hindu Temples.

(A) exempted
(B) not exempted
(C) relevant
(D) none of these

நகர வாடகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (2/96) இந்து கோவில்களுக்கு __________

(A) விலக்களிக்கிறது
(B) விலக்களிக்கவில்லை
(C) பொருத்துவது
(D) இதில் எதுவுமே இல்லை

39. The encroachers in temple properties may be evicted by the Assistant Commissioner as per sesc.78 and 79 of 1959 Act. The encroachers can not in this regard, in civil courts.

(A) file a suit
(B) compromise
(C) settle
(D) claim compensation

1959 சட்டப்பிரிவு 78 மற்றும் 79ன் படி ஆக்கிரமிப்பாளர்கள் மீது உதவி ஆணையர் நடவடிக்கை எடுத்து வெளியேற்றலாம். இதனை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர்கள் உரிமையியல் நீதிமன்றத்தில் __________ இயலாது.

(A) வழக்குத் தொடர
(B) சமரச தீர்வு காண
(C) உடன்பாடு செய்ய
(D) இழப்பீடு பெற

40. With effect from 18.3.2004 the name of the tenants occupying buildings/sites may be changed, if he paid 15 times the rent fixed as per G.O. No. 353/4.6.99 towards

(A) Deposits
(B) Donations
(C) Repayable with interest
(D) Repayable without interest

18.03.2004 முதல் கட்டடம் மற்றும் மனைகளில் குடியிருக்கும் வாடகைதாரர்களின் பெயர் மாற்றம் செய்ய அரசாணை எண் 353/4.6.99ன் படி நிர்ணயம் செய்த புதிய வாடகையில் 15 மடங்கு தொகை __________ பெறப்பட வேண்டும்.

(A) காப்புத் தொகையாக
(B) நன்கொடையாக
(C) வட்டியுடன் திருப்பிக் கொடுக்கும் தொகையாக
(D) வட்டி இல்லாமல் திருப்பிக் கொடுக்கும் தொகையாக

41. Tamil Nadu land reform (Fixation of ceiling on land) Act 1961 will__________ to lands held by existing religious institution or religious trust of public name.

(A) apply

(B) not apply

(C) partially apply

(D) none of these

நில உச்ச வரம்பு குறித்து தமிழ்நாடு அரசின் நிலச் சீர்திருத்த சட்டம் 1961 சமய நிறுவனங்களுக்கும் அறக்கட்டளைகளுக்கும்

(A) பொருந்தும்

(B) பொருந்தாது

(C) பகுதியாகப் பொருந்தும்

(D) இவற்றில் எதுவுமே இல்லை

42. If the temple lands are ought to be acquired for public use_________has to be obtained from the commissioner.

(A) no objection certificate

(B) particulars regarding the land owner

(C) patta

(D) kist

பொது நோக்கத்திற்காக கோவில் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய அவசியமேற்பட்டால் அறநிலையத்துறை ஆணையரிடமிருந்து __________பெறப்பட வேண்டும்.

(A) எதிர்ப்பின்மைச் சான்றிதழ்

(B) மேற்படி நிலம் கோவிலுக்குச் சொந்தமானது என்பதற்கான ஆதாரம்

(C) பட்டா

(D) கிஸ்து

43. Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act 1960 will ________ to temple buildings.

(A) apply

(B) will not apply

(C) partially applied

(D) none of these

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் 1960 கோவில் கட்டிடங்களுக்கு

(A) பொருந்தும்

(B) பொருந்தாது

(C) பகுதியாகப் பொருந்தும்

(D) இவற்றில் எதுவுமே இல்லை

44. Dedicating women as "davadasis" to Hindu deifier, idols was prevented by the Tamil Nadu Devadasis (Prevention of Dedication) act in the year

(A) 1950 (B) 1951

(C) 1947 (D) 1948

இந்து கோவில்கள் மற்றும் விக்கிரகங்களுக்கு பெண்களை நேர்ந்து விடும் "தேவதாசி" நடைமுறை தமிழ்நாடு அரசின் __________ வருட சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

(A) 1950 (B) 1951

(C) 1947 (D) 1948

45. The act of burying alive of a person in the place of worship or in the precincts in the State of Tamil Nadu en damages the human life. This practice is prohibited by Tamil Nadu prohibition of Ritual and Practice of burying alive of a person in the year

(A) 1998 (B) 2000

(C) 2001 (D) 2002

வழிபாட்டுத் தலங்களில் மனித உயிர்களை உயிருடன் புதைக்கும் பழக்கம் மனித உயிர்களுக்கே ஆபத்தானது என்பதால் தமிழ்நாடு அரசு மதச் சடங்கின் பொருட்டு மனிதர்களை உயிருடன் புதைக்கும் பழக்கத்தை தமிழ்நாடு அரசின் __________ வருட சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

(A) 1998 (B) 2000

(C) 2001 (D) 2002

46. Persons who are not hindus are not allowed to the sanctum of the temple as per Tamil Nadu Temple Entry authorization act.

(A) 1947

(B) 1948

(C) 1949

(D) 1950

இந்துக்கள் அல்லாதவர்கள் கருவறைக்குள் நுழைவதைத் தடை செய்யும் தமிழ்நாடு கோவிலுக்குள் நுழையும் உரிமைச் சட்டம் __________ ல் இயற்றப்பட்டது.

(A) 1947 (B) 1948

(C) 1949 (D) 1950

47. The Dhittam register of a religious institution whose assessable income was Rs.9,00,000/- was approved by the Additional Commissioner.

(A) Correct (B) Incorrect

(C) Commissioner should approve (D) Joint Commissioner may approve

ரூ. 9,00,000/- நிகர வருவாய் உள்ள திருக்கோவிலுக்குரிய திட்டம் பதிவேட்டை கூடுதல் ஆணையர் அங்கீகாரம் செய்துள்ளார்.

(A) சரி

(B) தவறு

(C) ஆணையர் தான் அங்கீகரிக்க வேண்டும்

(D) இணை ஆணையர் அங்கீகரிக்கலாம்

48. In case of an emergency the appropriate authority may use his discretion in the matter of opening the hundial and crediting the proceeds in the bank.

(A) Fire

(B) Attempted theft

(C) Non co-operation between the executive authority

(D) All these

அவசர நிலையைக் கருதி உரிய அலுவலர்கள் கீழ்க்கண்ட நேர்வுகளில் உண்டியலைத் திறந்து பணத்தை வங்கியில் இட்டு வைக்கலாம்.

(A) தீ விபத்து (B) களவு முயற்சி

(C) நிர்வாகிகளுக்குள் ஒற்றுமை இன்மை (D) இவை அனைத்தும்

49. Temporary hundial or receptacle installed for festivals or other occasion shall be sealed by the

(A) Inspector (B) Officer deputed

(C) Assistant Commissioner (D) A or B

தற்காலிக உண்டியல் அல்லது குடங்கள் திருவிழாவுக்காக நிறுவப்பட்டால், அவ்வுண்டியல்கள்__________ஆல் சீலிடப்பட வேண்டும்.

(A) ஆய்வர்

(B) திருவிழாவுக்காக நியமிக்கப்பட்ட அலுவலர்

(C) உதவி ஆணையர்

(D) A அல்லது B

50. Gold and silver obtained through hundial collections may be recorded in the___________ resiger.

(A) Hundial assortment book
(B) Hundial assortment register
(C) Uncurrent coins register
(D) Kanikkai register

உண்டியல் திறப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற தங்கம் மற்றும் வெள்ளி இனங்களை __________ பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

(A) உண்டியல் இருப்பு பதிவேடு
(B) உண்டியல் திறப்பு பதிவேடு
(C) செல்லாத நாணயங்கள் இருப்பு பதிவேடு
(D) காணிக்கை பதிவேடு

51. Under U.D.R scheme, the name of the pattadhar is wrongly noted in some cases to rectify the defects, special officers (temple land) were appointed in Madurai and Coimbatore. In other districts ___________ were requested to do the work by the commissioner.

(A) Revenue Divisional Officer
(B) District Revenue Officer
(C) Thashildhar
(D) V.A.

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் போது தவறுதலாக தனி நபர்களின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இக்குறைபாட்டினைக் களைய கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் தனி அலுவலர் (ஆலய நிலங்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர். இதர மாவட்டங்களில் ____________ இந்தப் பணியினை மேற்கொள்ள ஆணையரால் வேண்டப்பட்டுள்ளனர்.

(A) வருவாய் கோட்டாட்சியர்
(B) மாவட்ட வருவாய் அலுவலர்
(C) வட்டாட்சியர்
(D) கிராம நிர்வாக அலுவலர்

52. The temple jewels and valuables may be insured against dacoit. The amount paid to the insurance company is 0.08 paise for Rs. 100/- moreover __________ % maybe deducted from the total insured amount and paid to the company.

(A) 2%
(B) 4%
(C) 5%
(D) 10%

திருக்கோவிலில் உள்ள நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகள் கொள்ளை மற்றும் களவுக்கு எதிராக காப்பீடு செய்யப்பட வேண்டும். காப்பீடு தொகை ரூ. 100/- க்கு 0.08 பைசா ஆகும். மொத்த காப்பீடு தொகையில் ___________ விழுக்காடு கழிவு செய்து தொகை செலுத்தப்பட வேண்டும்.

(A) 2 %
(B) 4 %
(C) 5 %
(D) 10 %

53. The maximum period of lease of immovable properties is __________ years

(A) 4 years (B) 3 years

(C) 10 years (D) 6 years

திருக்கோவிலுக்கு சொந்தமான அசையா சொத்துக்கள் அதிகபட்சமாக__________ ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடலாம்.

(A) 4 வருடங்கள் (B) 3 வருடங்கள்

(C) 10 வருடங்கள் (D) 6 வருடங்கள்

54. To boost the Annadhana Dhittam, the donors may be informed that the amount offered will be exempted from income tax under sec.

(A) 48F (B) 65C

(C) 80 G (D) 110

அன்னதான திட்டத்தை ஊக்குவிக்க, அன்னதானத்திற்கு வழங்கப்படும் நன்கொடைக்கு __________பிரிவின் கீழ் வரி விலக்கு உண்டு என்பதை நன்கொடையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

(A) 48 F (B) 65 C

(C) 80 G (D) 110

55. In respect of senior grade temples, the auction proceedings should be sent __________ to the commissioner for approval.

(A) Directly (B) through Joint Commissioner

(C) Through Inspector (D) through the chairman, board of trustee

முதுநிலைத் திருக்கோவில்களைப் பொருத்த வரையில் ஏல நடவடிக்கையினை ஆணையரின் ஒப்புதலுக்காக __________ அனுப்பி வைக்கலாம்.

(A) நேரடியாக (B) இணை ஆணையர் மூலமாக

(C) ஆய்வர் மூலமாக (D) அறங்காவலர் குழுத் தலைவர் மூலமாக

56. While enjoying the lease of a temple, the lessee died in accident__________ maybe allowed to continue the lease for the remaining period with proper permission.

(A) temple
(B) the legal heirs
(C) the lessees relatives
(D) the trustees

திருக்கோவில் குத்தகைதாரர் ஒருவர் குத்தகை காலம் முடியும் முன்னர் விபத்தில் காலமாகிவிட்டார் மேற்படி குத்தகையை __________எஞ்சியுள்ள காலத்திற்கு உரிய அனுமதியுடன் தொடர அனுமதிக்கலாம்.

(A) கோவில்
(B) சட்டப்படியான வாரிசுகள்
(C) குத்தகைதாரரின் உறவினர்கள்
(D) அறங்காவலர்கள்

57. In order to prevent encroachment __________ may be placed in the lands/ buildings, for public notice.

(A) name board
(B) advertisement in news paper
(C) through Dom Dom
(D) through bit notice

திருக்கோவிலுக்கு சொந்தமான நிலங்கள்/கட்டிடங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகாமல் தடுக்க __________வைத்து, பொதுமக்களுக்கு தெரியப்படுத்தலாம்

(A) திருக்கோயிலுக்குச் சொந்தமானது எனப்பெயர் பலகை
(B) செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தலாம்
(C) டாம் டாம் மூலம் அறிவிக்கலாம்
(D) நோட்டீஸ் அச்சடித்து வழங்கலாம்

58. Fair rent was not fixed for a building belonging to the temple, because suit is pending in the court.

(A) Correct
(B) Incorrect
(C) Fair rent may be fixed on completion of the suit
(D) Not necessary

திருக்கோவிலுக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்திற்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்படவில்லை.

(A) சரி
(B) தவறு
(C) வழக்கு முடிவடைந்த பின்னர் நியாய வாடகை நிர்ணயம் செய்யலாம்
(D) தேவையற்றது

59. Tasdic, Mohini and Berig deduction amount is increased by __________ % at for extent, for the temple lands.

(A) 5 (B) 15

(C) 10 (D) 20

திருக்கோவில் நிலங்களுக்கு வழங்கப்பட்டு வந்த தஸ்திக், மோகினி பேரிஜ் கழிவு தொகை தற்போது __________ மடங்காக உயர்வு செய்யப்பட்டுள்ளது.

(A) 5 (B) 15

(C) 10 (D) 20

60. The temple servants may surrender __________ days at the time of retirement for encashment.

(A) 90 (B) 120

(C) 180 (D) 240

திருக்கோவில் பணியர்கள் பணி ஓய்வு பெறும் போது அவர்களது ஈட்டிய விடுப்புக் கணக்கிலிருந்து __________ நாட்களை ஒப்படைப்பு செய்து பணப் பயன் பெறலாம்

(A) 90 (B) 120

(C) 180 (D) 240

61. In the D.C.B. register name of the lessee and his father name his full address maybe entered.

(A) Correct (B) Incorrect

(C) Address not necessary (D) Contact number may not be entered

கேட்பு வசூல் மற்றும் நிலுவைப் பதிவேட்டில் குத்தகைதாரரின் பெயர் அவரது தகப்பனார் பெயர், முழு விலாசம் ஆகியவை எழுதப்பட வேண்டும்.

(A) சரி

(B) தவறு

(C) விலாசம் தேவையில்லை

(D) தொடர்பு கொள்ள செல்போன் எண் குறிப்பிடலாம்

62. While collecting rent from a tenant, the amount collected at the end of the Fasli as per the M.R. should be compared with the D.C.B. and tallied

(A) Correct
(B) Incorrect
(C) Not necessary
(D) Irrelevant

வாடகைதாரரிடமிருந்து வசூல் செய்யும் போது அந்த பசலி ஆண்டின் கடைசி வாடகை இரசீதின் படி உள்ள வாடகை நிலுவையும் கேட்பு வசூல் நிலுவை பதிவேட்டின் படி உள்ள வாடகை நிலுவையும் ஒத்துப் போக வேண்டும்.

(A) சரி
(B) தவறு
(C) தேவையற்றது
(D) பொருத்தமற்றது

63. The temple quarters maybe allotted to the temple staff on the basis of _________ by the Executive Authority.

(A) Discretion of Executive Officer
(B) Registration seniority
(C) Transfer recommendation
(D) Staff's influence

திருக்கோவில் குடியிருப்புகளில் திருக்கோவில் பணியாளர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்வது ___________அடிப்படையில் இருக்க வேண்டும்

(A) செயல் அலுவலரின் விருப்பப்படி
(B) பதிவு முன்னுரிமை
(C) அறங்காவலரின் சிபாரிசு
(D) பணியாளரின் ஆளுமைக்கேற்ப

64. Festival advance may be granted to the temporary staff after obtaining __________ from a permanent employee.

(A) promissory note
(B) surety bond
(C) cheque leaf without date
(D) none of these

தற்காலிக பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணம் வழங்கலாம் ஆனால் நிரந்தர பணியாளர் ஒருவரிடம் ___________பெறப்பட வேண்டும்

(A) கடன் பத்திரம்
(B) பிணை முறி பத்திரம்
(C) தேதி இல்லாத காசோலை
(D) இவற்றில் எதுவுமே இல்லை

65. At the time of retirement, the temple servants will be paid Rs. _________ towards special period fund.

(A) Rs.5000/-
(B) Rs.10,000/-
(C) Rs.15,000/-
(D) Rs.20,000/-

திருக்கோவில் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது ரூ.__________சிறப்பு சேமநல நிதி தொகையாக வழங்கப்படும்

(A) ரூ. 5000/-
(B) ரூ. 10,000/-
(C) ரூ. 15,000/-
(D) ரூ. 20,000/-

66. If the auction amount of the previous fasli is more than one lakh but below 5 lakhs, the lease should be conducted in the presence of

(A) Inspector
(B) Assistant Commissioner
(C) Deputy Commissioner
(D) Joint Commissioner

ஒரு திருக்கோவிலின் சென்ற பசலி ஆண்டு ஏலத் தொகை ஒரு லட்சத்துக்கு அதிகமாகவும் 5 லட்சத்துக்கும் குறைவாகவும் இருப்பின் ஏலம்/குத்தகை __________முன்னிலையில் நடத்தப்பட வேண்டும்.

(A) ஆய்வர்
(B) உதவி ஆணையர்
(C) துணை ஆணையர்
(D) இணை ஆணையர்

67. The power of approving the reports of appraisement of jewels and valuable relating to the temples as mentioned under rule 21(6) under section 116(2)(XII) and section 42 to the

(A) Deputy Commissioner (Head Quarters)
(B) Joint Commissioner (Thiruppani)
(C) Additional Commissioner
(D) Commissioner

விதி எண் 21(6) சட்டப்பிரிவு 116(2)(XII) மற்றும் சட்டப்பிரிவு 42 ன் படி நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களின் மதிப்பீட்டறிக்கை __________அங்கீகரிக்கப்பட வேண்டும்

(A) துணை ஆணையர் (தலைமையிடம்)
(B) இணை ஆணையர் (திருப்பணி)
(C) கூடுதல் ஆணையர்
(D) ஆணையர்

68. As per 18/80 of the public trust act, the lease amount will be in the ratio of

(A) 75:25 (B) 60:40

(C) 50:50 (D) 70:30

குத்தகைதாரர்கள் நிவாரண சட்டம் 18/80 ன் படி குத்தகை அளவை ______________ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(A) 75:25 (B) 60:40

(C) 50:50 (D) 70:30

69. A sum of Rs. ___________ may be collected from the donors for the maintenance of the live stock, they donated.

(A) Rs. 1000/- (B) Rs. 2000/-

(C) Rs. 3000/- (D) Rs. 5000/-

திருக்கோவிலுக்கு கால்நடைகளை உபயமாக வழங்கும் நன்கொடையாளர்களிடமிருந்து "கால்நடை பராமரிப்புக் கட்டணமாக" ரூ. ____________ வசூலித்திட வேண்டும்.

(A) ரூ. 1000/- (B) ரூ. 2000/-

(C) ரூ. 3000/- (D) ரூ. 5000/-

70. As per public trust act 38/90 if the tenant paid the F.1400 demand and 1/4 arrear demand in a single payment and 1/3 arrear demand in a 5 payments the remaining arrears is deemed to be

(A) Waived (B) Transferred to suit register

(C) Treated as collected (D) None of these

தமிழ்நாடு குத்தகைதாரர்கள் நிவாரணச் சட்டம் 38/90 ன் படி 1400 ம் பசலி கேட்பு முழுவதும், நிலுவையில் 1/4 பங்கு தொகையையும் ஒரே தவணையிலும் 1/3 பங்கு தொகையை 5 தவணைகளிலும் செலுத்தினால் பாக்கி முழுவதும் ____________ கருதப்பட வேண்டும்.

(A) ரத்தானதாக (B) மாற்றியமைக்கப்பட்டதாக

(C) வசூலிக்கப்பட்டதாக (D) இவற்றில் எதுவுமே இல்லை

71. If a temple servant is died or terminated from service, the advance amount pending recovery from him maybe

(A) recovered in cash

(B) waived

(C) adjusted from his P.F. account

(D) Transferred to cannot be recovered

ஒரு திருக்கோவில் பணியாளர் இறந்துவிட்டாலோ அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டாலோ அவரது பெயரில் உள்ள முன்பணத்தை

(A) ரொக்கமாக வசூலிக்கலாம்

(B) தள்ளுபடி செய்யலாம்

(C) வருங்கால வைப்புநிதி கணக்கிலிருந்து ஈடு செய்யலாம்

(D) வாராக் கடன் பதிவேட்டிற்கு மாற்றம் செய்யலாம்

72. With effect from 07.10.2016 Departmental Pension for the temple employees retired from service is

(A) Rs.1000/- (B) Rs.2000/-

(C) Rs.3000/- (D) Rs.5000/-

07.10.2016 முதல் துறை ரீதியான ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ. ____________ ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

(A) ரூ. 1000/- (B) ரூ. 2000/-

(C) ரூ. 3000/- (D) ரூ. 5000/-

73. If a temple servant died after retirement, his family pension will be sanctioned to his wife/husband @ Rs.

(A) Rs.500/- (B) Rs.1000/-

(C) Rs.1500/- (D) Rs.2500/-

பணியிலிருந்து ஓய்வு பெற்ற திருக்கோவில் பணியாளர் இறந்துவிட்டால் அவரது கணவன்/மனைவிக்கு ரூ.____________ குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

(A) ரூ. 500/- (B) ரூ. 1000/-

(C) ரூ. 1500/- (D) ரூ. 2500/-

74. The surplus funds of the temple may be invested in banks _________ % of the total investments maybe made in the Tamil Nadu Transport and Finance Corporation / Tamil Nadu Electricity Finance Development Corporation / Tamil Nadu Housing Board and Tamil Nadu Industrial Investment Corporation.

(A) 30%
(B) 35%
(C) 40%
(D) 45%

திருக்கோவில் உபரிநிதியினை _________ விழுக்காடு தமிழ்நாடு போக்குவரத்து நிதிக்கழகம்/தமிழ்நாடு மின் விசை மற்றும் உள்ளமைப்பு நிதி மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தில் இட்டு வைக்க வேண்டும்

(A) 30 சதவீதம்
(B) 35 சதவீதம்
(C) 40 சதவீதம்
(D) 45 சதவீதம்

75. If the hundial collection amount is more than _________ the Assistant Commissioner will _________ supervise the hundial opening.

(A) Rs. 1,00,000/-
(B) Rs. 2,00,000/-
(C) Rs. 3,00,000/-
(D) Rs. 5,00,000/-

உண்டியல் திறப்பின் மூலம் ரூ._________ மேல் கிடைக்கப்பெற்றால் உதவி ஆணையர் உண்டியல் திறப்பில் கலந்து கொள்ள வேண்டும்

(A) ரூ. 1,00,000/-
(B) ரூ. 2,00,000/-
(C) ரூ. 3,00,000/-
(D) ரூ. 5,00,000/-

76. Proposals regarding new thiruppani account opened tickets introducing face value of the tickets enhanced maybe sanctioned by the _________ in respect of non listed temples.

(A) Assistant Commissioner
(B) Deputy Commissioner
(C) Joint Commissioner
(D) Commissioner

பட்டியலில் சேராத திருக்கோவில்களில் புதிதாக திருப்பணி கணக்கு துவக்குதல், கட்டணச் சீட்டுகள் அமுல் படுத்துதல் மற்றும் கட்டணச் சீட்டுகளின் முகமதிப்பினை உயர்வு செய்தல் போன்ற பிரேரணைகளை _________ ஆய்வு செய்து உத்திரவு வழங்கலாம்

(A) உதவி ஆணையர்
(B) துணை ஆணையர்
(C) இணை ஆணையர்
(D) ஆணையர்

77. With effect from March 2006, __________ scheme is introduced to temple employees instead of C.P.F. scheme.

(A) Pension (B) Family pension

(C) E.P.F (D) None of these

மார்ச் 2006 முதல் திருக்கோவில் பணியாளர்களுக்கு C.P.F. திட்டத்திற்கு பதிலாக__________ திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

(A) ஓய்வூதியத் திட்டம் (B) குடும்ப ஓய்வூதிய திட்டம்

(C) இ.பி.எப் திட்டம் (D) இவற்றில் எதுவுமே இல்லை

78. Every person appointed to the post in the temple by direct recruitment shall from the date on which he joins duty, be on probation for a total period of

(A) 6 months (B) 1 year

(C) 3 years (D) 2 years

திருக்கோவில் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்படும் நபர்கள், அவர்கள் பணியில் நேர்ந்த நாளிலிருந்து __________க்கு தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவார்கள்.

(A) 6 மாதங்கள் (B) 1 வருடம்

(C) 3 வருடங்கள் (D) 2 வருடங்கள்

79. The value of paddy used for paditharam for fasli 1425 is Rs. __________ per quintal.

(A) Rs. 1350/- (B) Rs. 1450/- (C) Rs. 1500/- (D) Rs. 1490/-

திருக்கோவில் படித்தரத்திற்கு உபயோகப்படுத்தும் நெல்லின் மதிப்பு 1425ம் பசலி ஆண்டுக்கு ரூ.__________ (குவிண்டால் 1க்கு) ஆகும்.

(A) ரூ. 1350/- (B) ரூ. 1450/- (C) ரூ. 1500/- (D) ரூ. 1490/-

80. As per sec. __________ the trustee of every religious institution shall before the end of March in each year submit a budget for approval.

(A) 48 (B) 58 (C) 86 (D) 68

சட்டப்பிரிவு __________ ன் படி சமய நிறுவனம் ஒவ்வொன்றின் அறங்காவலரும் ஒவ்வோராண்டிலும் மார்ச் திங்கள் முடிவுக்கு முன்னதாக வரவு செலவு திட்டம் தயார் செய்து ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(A) 48 (B) 58 (C) 86 (D) 68

TC. 108

057/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR APPOINTMENT AS ASSISTANT AUDIT OFFICERS IN THE AUDIT WING OF THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (ADMN.) DEPARTMENT – PART – I(a) HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (A) ACT, 1959 AND THE RULES FRAMED THERE UNDER AND OTHER ACTS (THEORY AND PRACTICAL)

(With Books)

Maximum Time : 30 minutes — Maximum Marks : 20

### *IMPORTANT INSTRUCTIONS*

### DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. A temple constructed a shop in the temple premises on 1.7.2002. How to fix a fair rent to the above shop?

   1.7.2002 ல் கோவில் வளாகத்தில் கடை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்கடைக்கு எப்படி நியாய வாடகை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதை விளக்குக.

2. What are the audit checks to be exercised while auditing the Prasada stall lease in public auction?

   பிரசாத ஸ்டால் நடத்தும் உரிமையை பொது ஏலத்தில் விடும்போது தணிக்கையில் கவனிக்க வேண்டியவை எவை?

3. Explain the leave admissible to Temple servants and encashment of EL.

   திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் விடுப்பு மற்றும் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு குறித்து விவரிக்கவும்.

4. Explain family Benefit fund scheme of temple servants

   திருக்கோயில் பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி குறித்து விவரிக்கவும்.

5. What are the procedures to be followed in the installation, safeguarding and accounting of Hundials

   உண்டியல் நிறுவுதலும், உண்டியல் வரவினை கணக்கில் வைத்தலும் குறித்து விளக்கவும்.

6. Explain the procedures to be followed for the lease of temple properties?

   அறநிறுவனங்களின் சொத்துக்களை குத்தகைக்கு விடுவது தொடர்பான விதிமுறைகளை விளக்கவும்.